இந்திய அரசாங்கம்

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952

**(சட்ட எண் 53/1952)**

**(2004, டிசம்பர் 31 அன்று இருந்தவாறு)**

# THE NOTARIES ACT, 1952

**(Act No. 53 of 1952)**

**(As on the 31st December, 2004)**

தமிழாக்கம்:

இந்திய அரசாங்கத்திற்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

தலைமைச் செயலகம்

சென்னை-9

தமிழ்நாடு அரசாங்க எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு
வெளியிடப்பட்டது
2006

Price: Rs. 20.00

# சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952

(சட்ட எண் 53/1952)

# The Notaries Act, 1952

(Act No. 53 of 1952)

24-47—1

# PREFACE

This edition of the Notaries Act, 1952 (Act No. 53 of 1952) as on the 31st December, 2004 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the *Gazette of India*, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 10th February, 2004 on pages from 25 to 30.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it became the Authoritative Texts of the Act in Tamil.

New Delhi,
10th February, 2004.

(Signed)..........,
*Secretary to Government of India.*

## முன்னுரை

2004, டிசம்பர் 31ஆம் தேதியிலிருந்தவாறுள்ள சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952 (சட்ட எண் 53/1952)இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, 2004, பிப்ரவரி 10ஆம் தேதியிட்ட *இந்திய அரசிதழின்* சிறப்பிதழ் பகுதி XV, பிரிவு 1, தொகுதி 1 இன் 25 முதல் 30 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2இன் கூறு (அ)வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி,
10 பிப்ரவரி, 2004.

(ஒப்பம்)..........,
இந்திய அரசாங்கச் செயலாளர்.

# சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952

## (சட்ட எண் 53/1952)

### பொருளடக்கம்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம் | 1 |
| 2. | பொருள்வரையறைகள் | 1 |
| 3. | சான்றுறுதி அதிகாரிகளை அமர்த்துவதற்கான அதிகாரம் | 2 |
| 4. | பதிவணங்கள் | 2 |
| 5. | பதிவணத்தில் பெயர்களைப் பதிவுசெய்தல் மற்றும் தொழிலாற்றுவதற்கான உறுதிச்சான்றுகளை வழங்குதல் அல்லது புதுப்பித்தல். | 2 |
| 6. | சான்றுறுதி அதிகாரிகளின் பட்டியல்களை ஆண்டுதோறும் வெளியிடுதல் | 2 |
| 7. | சான்றுறுதி அதிகாரிகளின் இலச்சினை | 2 |
| 8. | சான்றுறுதி அதிகாரிகளின் பதவிப் பணிகள் | 2 |
| 9. | உறுதிச்சான்றின்றித் தொழிலாற்றுவதற்குத் தடை | 3 |
| 10. | பதிவணத்திலிருந்து பெயர்களை நீக்குதல் | 4 |
| 11. | பிற சட்டங்களில் சான்றுறுதி அதிகாரிகள் பற்றிய சுட்டுகைகளுக்கான பொருள்கோள் | 4 |
| 12. | ஒரு சான்றுறுதி அதிகாரியெனப் பொய்யாகக் கூறுதல், முதலியவற்றுக்கான தண்டனை | 4 |
| 13. | குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் | 5 |
| 14. | அயல்நாட்டுச் சான்றுறுதி அதிகாரிகளினால் செய்யப்பட்ட சான்றுறுதிச் செயல்களுக்கு ஏற்பளிப்பதற்கான எதிரீட்டு ஏற்பாடுகள் | 5 |
| 15. | விதிகளை வகுப்பதற்கு அதிகாரம் | 5 |
| 16. | [நீக்கறவு செய்யப்பட்டது] | 6 |

# சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952

## (சட்ட எண் 53/1952)

[1952, ஆகஸ்டு 9]

சான்றுறுதி அதிகாரிகளின் விழைதொழிலை முறைப்படுத்துவதற்கான ஒரு சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு. அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், சான்றுறுதி அதிகாரிகள் சட்டம், 1952 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் [1][தேதியன்று செல்லாற்றல் பெறும்.]

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

[2][(அ) * * *]

(ஆ) "முறையாவணம்" என்பது, எந்த ஆவணத்தின் மூலமாக உரிமை அல்லது கடப்பாடு எதுவும் ஏற்படுத்தப்படுகிறதோ, உரிமைமாற்றம் செய்யப்படுகிறதோ, மாற்றமைவு செய்யப்படுகிறதோ, வரையறுக்கப்படுகிறதோ, நீட்டிக்கப்படுகிறதோ, தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறதோ, ஒழிக்கப்படுகிறதோ அல்லது பதிவு செய்யப்படுகிறதோ அல்லது அவ்வாறு செய்யப்பட்டிருப்பதாகப் புலப்படுகிறதோ அந்த முறையாவணம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

25/1961 [3][(இ) "சட்டத் தொழிலாற்றுநர்" என்பது, வழக்குரைஞர்கள் சட்டம், 1961 இன் வகைமுறைகளின்படி பட்டியல் எதிலும் சேர்க்கப்பட்டுள்ள ஒரு வழக்குரைஞர் என்று பொருள்படும்.]

(ஈ) "சான்றுறுதி அதிகாரி" என்பது, இந்தச் சட்டத்தின்படி அத்தகையவராக அமர்த்தப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கநிலையிலிருந்து ஈராண்டுக்கால அளவுக்கு, அது, அத்தகைய தொடக்கநிலைக்கு முன்பு மாற்றுமுறையாவணங்கள்
26/1881 சட்டம், 1881 இன்படி ஒரு சான்றுறுதி அதிகாரியாக அமர்த்தப்பட்டவரும், அத்தகைய தொடக்கநிலையை ஒட்டிமுன்பு, இந்தியாவின் பகுதி எதிலும் தொழிலாற்றி வருபவருமான ஒரு நபரையுங்கூட உள்ளடக்கும்:

**மேலும் வரம்புரையாக:** ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரையில், சொல்லப்பட்ட ஈராண்டுக்கால அளவானது, அந்த மாநிலத்தில் இந்தச் சட்டம் செல்லாற்றல் பெற்ற தேதியிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

(உ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஊ) "பதிவணம்" என்பது, பிரிவு 4 இன்படி அரசாங்கத்தினால் வைத்துவரப்படும் சான்றுறுதி அதிகாரிகள் பதிவணம் என்று பொருள்படும்;

---

1. இந்தச் சட்டம் 14-2-1956 அன்று செல்லாற்றல் பெற்றது.
2. (அ) கூறு, மையச் சட்டங்கள் (ஜம்மு-காஷ்மீருக்கு நீட்டித்தல்) சட்டம், 1968 (சட்ட எண் 25/1968)இன் பிரிவு 2 மற்றும் இணைப்புப்பட்டியல் மூலம் விட்டுவிடப்பட்டது (15-8-1968 முதல் செல்திறம் பெறுமாறு).
3. சான்றுறுதி அதிகாரிகள் (திருத்தச்) சட்டம், 1999 (சட்ட எண். 36/1999)இன் பிரிவு 2 இனால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(எ) "மாநில அரசாங்கம்" என்பது, ஒன்றியத்து ஆட்சி நிலவரை ஒன்றைப் பொறுத்தவரையில், அதன் ஆட்சியாளர் என்று பொருள்படும்.

3. இந்தியா முழுவதற்கும் அல்லது இந்தியாவின் பகுதி எதற்கும் மைய அரசாங்கம், மாநிலம் முழுவதற்கும் அல்லது மாநிலத்தின் பகுதி எதற்கும் மாநில அரசாங்கம் எதுவும், எவரேனும் சட்டத் தொழிலாற்றுநர்களை அல்லது வகுத்துரைக்கப்படும் தகுதிப்பாடுகளையுடைய பிற நபர்களைச் சான்றுறுதி அதிகாரிகளாக அமர்த்தலாம். சான்றுறுதி அதிகாரிகளை அமர்த்துவதற்கான அதிகாரம்.

4. (1) மைய அரசாங்கமும், மாநில அரசாங்கம் ஒவ்வொன்றும் அந்த அரசாங்கத்தினால் அமர்த்தப்பட்டு இந்தச் சட்டத்தின்படி சான்றுறுதி அதிகாரிகளாகத் தொழிலாற்றுவதற்கு உரிமை கொண்ட சான்றுறுதி அதிகாரிகளின் பதிவணம் ஒன்றை வகுத்துரைக்கப்படும் படிவத்தில் வைத்துவருதல் வேண்டும். பதிவணங்கள்.

(2) அத்தகைய பதிவணம் ஒவ்வொன்றும், அதில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள சான்றுறுதி அதிகாரிகளைப் பற்றி பின்வரும் விவரங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்; அவையாவன:—

(அ) அவரது முழுப்பெயர், பிறந்த தேதி, குடியிருக்கின்ற மற்றும் விழைதொழில் முகவரி;

(ஆ) அவருடைய பெயர் பதிவணத்தில் பதிவு செய்யப்பட்ட தேதி;

(இ) அவரது தகுதிப்பாடுகள்; மற்றும்

(ஈ) வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள் எவையும்.

5. (1) சான்றுறுதி அதிகாரியாகத் தொழிலாற்றக் கருதுகிற சான்றுறுதி அதிகாரி ஒவ்வொருவரும், அவரை அமர்த்துகிற அரசாங்கத்திற்கு வகுத்துரைக்கப்பட்டுள்ள கட்டணம், ஏதேனுமிருப்பின், அதனைச் செலுத்துவதன் பேரில்,— பதிவணத்தில் பெயர்களைப் பதிவு செய்தல் மற்றும் தொழிலாற்றுவதற்கான உறுதிச் சான்றுகளை வழங்குதல் அல்லது புதுப்பித்தல்.

(அ) பிரிவு 4 இன்படி அந்த அரசாங்கத்தினால் வைத்து வரப்படும் பதிவணத்தில் அவரது பெயரைப் பதிவு செய்து கொள்வதற்கும்,

(ஆ) அவருக்கு உறுதிச் சான்றளிக்கப்படுகின்ற தேதியிலிருந்து [1][ஐந்தாண்டுக் கால] அளவுக்குத் தொழிலாற்றுவதற்கு அவருக்கு அதிகாரமளிக்கிற ஓர் உறுதிச்சான்றுக்கும்,

உரிமை கொண்டவர் ஆவார்.

[2][(2) சான்றுறுதி அதிகாரியை அமர்த்துகிற அரசாங்கம், விண்ணப்பம் ஒன்றினையும் வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்தையும் பெற்றதன் பேரில், ஒரே நேரத்தில் ஐந்து ஆண்டுக்காலத்திற்கு எவரேனும் சான்றுறுதி அதிகாரியாகத் தொழிலாற்றுவதற்கான உறுதிச் சான்றினைப் புதுப்பிக்கலாம்.]

6. மைய அரசாங்கமும், மாநில அரசாங்கம் ஒவ்வொன்றும், ஒவ்வோராண்டும் ஜனவரி மாதத்தில், அந்த அரசாங்கத்தினால் அமர்த்தப்பட்டு, அந்த ஆண்டின் தொடக்கத்தில் தொழிலாற்றி வருகிற சான்றுறுதி அதிகாரிகளின் பட்டியல் ஒன்றை, அவர்கள் பற்றி வகுத்துரைக்கப்படலாகும் விவரங்களுடன் சேர்த்து அதிகாரமுறை அரசிதழில் வெளியிடுதல் வேண்டும். சான்றுறுதி அதிகாரிகளின் பட்டியல்களை ஆண்டுதோறும் வெளியிடுதல்.

7. சான்றுறுதி அதிகாரி ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படலாகும் வடிவத்திலும் வடிவமைப்பிலும் உள்ள ஓர் இலச்சினையைக் கொண்டிருத்தலும், தேவை ஏற்படுங்கால், அதனைப் பயன்படுத்துதலும் வேண்டும். சான்றுறுதி அதிகாரிகளின் இலச்சினை.

8. (1) ஒரு சான்றுறுதி அதிகாரி, தமது பதவியின் காரணமாக, பின்வரும் செயல்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்யலாம்; அவையாவன:— சான்றுறுதி அதிகாரிகளின் பதவிப்பணிகள்.

---

1. சான்றுறுதி அதிகாரிகள் (திருத்தச்) சட்டம், 1999 (சட்ட எண். 36/1999)இன் பிரிவு 3(அ)(ii) இனால் "மூன்று ஆண்டுகள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

2. மேற்படி சட்டத்தின் பிரிவு 3 (ஆ) இனால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(அ) முறையாவணம் எதுவும் எழுதிக் கொடுக்கப்பட்டது உண்மையென உறுதியளித்தல், அதற்கு உறுதியொப்பமிடுதல், உறுதிச் சான்றளித்தல் அல்லது சான்றொப்பமிடுதல்;

(ஆ) கடனுறுதிச் சீட்டு, உண்டி அல்லது மாற்றுச் சீட்டு எதனையும் ஏற்பதற்காக அல்லது செலுத்துவதற்காக முன்னிடுதல் அல்லது முன்னிலும் சிறந்த பிணையத்தைக் கோருதல்;

(இ) கடனுறுதிச் சீட்டு, உண்டி அல்லது மாற்றுச் சீட்டு எதனையும் ஏற்காமை அல்லது செலுத்தாமை மூலம் பணம் வழங்க மறுப்பதைக் குறித்துக் கொள்ளுதல் அல்லது அதற்கு மறுப்புக் குறிப்பு எழுதுதல் அல்லது முன்னிலும் சிறந்த பிணையத்திற்கு மறுப்புக் குறிப்பு எழுதுதல் அல்லது மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 இன்படி நன்மதிப்புச் செயல்களைத் தயாரித்தல் அல்லது அத்தகைய குறிப்பு அல்லது மறுப்புக் குறிப்பு குறித்து அறிவிப்புச் சார்வு செய்தல்; 26/1881

(ஈ) கப்பல் உறுதியுரையை, படகு உறுதியுரையை அல்லது சுணக்கக் கட்டணம், பிற வாணிகப் பொருட்பாடுகள் தொடர்பான மறுப்புக் குறிப்பினைக் குறித்துக் கொள்ளுதலும், அவற்றை எழுதுதலும்;

(உ) நபர் எவருக்கும் உறுதிமொழி செய்துவைத்தல் அல்லது அவரிடமிருந்து ஆணையுறுதியாவணம் பெறுதல்;

(ஊ) கப்பல் அடகுக் கடன் ஆவணம், கப்பல் தலைவரின் பிணைமுறி, கப்பல் வாடகை ஒப்பந்தங்கள் மற்றும் பிற வாணிக ஆவணங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல்;

(எ) இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடு அல்லது இடம் எதிலும் செல்திறம் பெறக் கருதப்படுகிற முறையாவணம் எதனையும், அந்த ஆவணத்தைச் செயற்படுத்தக் கருதப்படுகிற இடத்தின் சட்டத்திற்கு இணங்கியவாறான படிவத்திலும் மொழியிலும் தயாரித்தல், அதற்குச் சான்றொப்பமிடுதல் அல்லது அது உண்மையென உறுதியளித்தல்;

(ஏ) ஆவணம் எதனையும் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்த்தலும், அந்த மொழிபெயர்ப்புச் சரியென உறுதியளித்தலும்;

[1][(ஏஅ) நீதிமன்றம் அல்லது அதிகார அமைப்பு எதனாலும் பணிக்கப்படுவாரானால், உரிமை வழக்கு அல்லது குற்றவழக்கு விசாரணை எதிலும் சான்றினை பதிவு செய்வதற்காக ஓர் ஆணையராகச் செயற்படுதல்;

(ஏஆ) கோரப்படுவாரானால் பொதுவராக, நடுநிலையாளராக, அல்லது இணக்கத் தீர்வராகச் செயற்படுதல்;]

(ஐ) வகுத்துரைக்கப்படும் பிறசெயல் எதுவும்.

(2) உட்பிரிவு (1) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல் எதுவும், அது ஒரு சான்றுறுதி அதிகாரியால் அவரது கையொப்பத்துடனும் அதிகாரமுறை இலச்சினையுடனும் செய்யப்படும்போது தவிர, ஒரு சான்றுறுதிச் செயலாகக் கொள்ளப்படுதலாகாது.

9.(1) இந்தப் பிரிவின் வகையங்களுக்குட்பட்டு, நபர் எவரும், பிரிவு 5 இன்படி அவருக்கு வழங்கப்பட்டு செல்லாற்றலிலுள்ள தொழிலாற்றுவதற்கான உறுதிச்சான்றினை அவர் கொண்டிருந்தாலன்றி, ஒரு சான்றுறுதி அதிகாரியின் அதிகாரமுறை இலச்சினையின்கீழ் ஒரு சான்றுறுதி அதிகாரியாகத் தொழிலாற்றுதலோ அல்லது சான்றுறுதிச் செயல் எதனையும் செய்தலோ ஆகாது: உறுதிச் சான்றின்றித் தொழிலாற்றுவதற்குத் தடை.

1. இக்கூறுகள் சான்றுறுதி அதிகாரிகள் (திருத்தச்) சட்டம், 1999 (சட்ட எண். 36/1999) இன் பிரிவு 4 இனால் புகுத்தப்பட்டன.

***வரம்புரையாக:*** இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், ஒரு சான்றுறுதி அதிகாரியின் சார்பில் செயற்படுகிற அத்தகைய சான்றுறுதி அதிகாரியின் எழுத்தரினால் ஏற்புக்காக அல்லது செலுத்தத்திற்காகக் கடனுறுதிச் சீட்டு, உண்டி அல்லது மாற்றுச் சீட்டு—எதுவும் முன்னிடப்படுவதற்குப் பொருந்தாது.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஈராண்டுகள் முடிவுறும் வரையில், பிரிவு 2இன் கூறு (ஈ) இன் வரம்புரையில் சுட்டப்பட்டுள்ளவாறான நபர் எவருக்கும் பொருந்தாது:

[1][***வரம்புரையாக:*** ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரையில், சொல்லப்பட்ட ஈராண்டுக்கால அளவானது, அந்த மாநிலத்தில் இந்தச் சட்டம் செல்லாற்றல் பெற்ற தேதியிலிருந்து, கணக்கிடப்படுதல் வேண்டும்.]

10. சான்றுறுதி அதிகாரி எவரையும் அமர்த்துகிற அரசாங்கம்,— பதிவணத்திலிருந்து பெயர்களை நீக்குதல்.

(அ) அவர் அந்தப்படிக்கு ஒரு வேண்டுகோள் விடுப்பாரானால், அல்லது,

(ஆ) அவரால் செலுத்தப்பட வேண்டுமென வேண்டுறுத்தப்பட்டுள்ள வகுத்துரைக்கப்பட்ட கட்டணம் எதனையும் அவர் செலுத்தாதிருப்பாரானால், அல்லது

(இ) அவர் விடுவிப்புப் பெறாத நொடிப்பு நிலையராக இருப்பாரானால், அல்லது

(ஈ) அரசாங்கத்தின் கருத்தில் ஒரு சான்றுறுதி அதிகாரியாகத் தொழிலாற்றுவதற்கு அவரைத் தகுதியற்றவராக்குகிற தொழில் முறையான அல்லது வேறு நடத்தைக் கேடுக் குற்றம் புரிந்திருப்பதாக வகுத்துரைக்கப்பட்ட விசாரணையின் பேரில் அவர் கண்டறியப்பட்டிருப்பாரானால், [2][அல்லது]

[2][(உ) நீதிமன்றம் எதனாலும் ஒழுக்க ஈனம் உள்ளடங்கிய குற்றம் ஒன்றிற்காக தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாரானால், அல்லது

(ஊ) தொழிலாற்றுவதற்கான அவரது உறுதிச்சான்று புதுப்பிக்கப்படாதிருக்குமானால்.]

பிரிவு 4இன்படி வைத்து வரப்படும் பதிவேட்டிலிருந்து, ஆணை வாயிலாக, அந்தச் சான்றுறுதி அதிகாரியின் பெயரை நீக்கிவிடலாம்.

11. பிற சட்டம் எதிலும் ஒரு சான்றுறுதி அதிகாரி பற்றிய சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின்படி தொழிலாற்றுவதற்கு உரிமை கொண்ட ஒரு சான்றுறுதி அதிகாரி பற்றிய சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். பிறசட்டங்களில் சான்றுறுதி அதிகாரிகள் பற்றிய சுட்டுகைகளுக்கான பொருள்கோள்.

12. (அ) சான்றுறுதி அதிகாரியாக அமர்த்தப்படாமலே தாம் ஒரு சான்றுறுதி அதிகாரியெனப் பொய்யாகக் கூறுகிற, அல்லது ஒரு சான்றுறுதி அதிகாரியெனப் பொய்யாகக் கூறுதல், முதலியவற்றுக்கான தண்டனை.

(ஆ) பிரிவு 9-க்கு மீறுகையாக ஒரு சான்றுறுதி அதிகாரியாகத் தொழிலாற்றுகிற அல்லது சான்றுறுதிச் செயல் எதனையும் செய்கிற

நபர் எவரும், [3][ஓராண்டு] வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ, அல்லது பணத் தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

---

1. மையச்சட்டங்கள் (ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு நீட்டித்தல்) சட்டம் 1968 (சட்ட எண். 25/1968) இன் பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் மூலம் புகுத்தப்பட்டது.

2. சான்றுறுதி அதிகாரிகள் (திருத்தச்) சட்டம், 1999 (சட்ட எண். 36/1999)இன் பிரிவு 5(i) மற்றும் (ii) இனால் புகுத்தப்பட்டன.

3. மேற்படி சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் "மூன்று மாதங்கள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

13. (1) ஒரு சான்றுறுதி அதிகாரியால், இந்தச் சட்டத்தின்படி அவரது பதவிகளை ஆற்றுவதில் அல்லது ஆற்றுமாறு புலப்படுவதில் செய்யப்பட்ட குற்றச்செயல் எதனையும், நீதிமன்றம் எதுவும், இதற்கெனப் பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாக மைய அரசாங்கத்தினால் அல்லது ஒரு மாநில அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரால் எழுத்து மூலம் அளிக்கப்பட்ட முறையீட்டின்பேரில் அல்லாமல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதலாகாது.

குற்றச் செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

(2) ஒரு மாகாணத் தலைநகர் குற்றவியல் நடுவராக அல்லது ஒரு முதல் வகுப்புக் குற்றவியல் நடுவராக இல்லாத பிற குற்றவியல் நடுவர் எவரும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலை விசாரித்தல் ஆகாது.

14. இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடு அல்லது இடம் ஏதொன்றின் சட்டம் அல்லது நெறிமுறை வாயிலாக, இந்தியாவில் சான்றுறுதி அதிகாரிகளால் செய்யப்பட்ட சான்றுறுதிச் செயல்களுக்கு, அந்த நாட்டில் அல்லது இடத்தில், குறிப்பிட்ட நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது என மைய அரசாங்கம் தெளிவுறக்காணுமாயின், அத்தகைய நாட்டில் அல்லது இடத்தில் சான்றுறுதி அதிகாரிகளால் சட்டப்படி செய்யப்பட்ட சான்றுறுதிச் செயல்களுக்கு, அனைத்து நோக்கங்களுக்காகவும், அல்லது, நேர்வுக்கேற்ப, அறிவிக்கையில் குறித்துரைக்கப்படும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக, ஏற்பளிக்கப்படும் என மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக விளம்பலாம்.

அயல்நாட்டுச் சான்றுறுதி அதிகாரிகளினால் செய்யப்பட்ட சான்றுறுதிச் செயல்களுக்கு ஏற்பளிப்பதற்கான எதிரீட்டு ஏற்பாடுகள்.

15. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம்.

விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகைசெய்யலாம்; அவையாவன:—

(அ) ஒரு சான்றுறுதி அதிகாரிக்கான தகுதிப்பாடுகள்; ஒரு சான்றுறுதி அதிகாரியாக அமர்த்தப்படுவதற்கான விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டிய படிவம் மற்றும் முறை; அத்தகைய விண்ணப்பங்கள் மீது முடிவெடுக்கும் முறை;

(ஆ) ஒரு சான்றுறுதி அதிகாரியாக அமர்த்தப்படுவதற்கான விண்ணப்பம் செய்கிற நபர் எவரும், நடத்தை, நேர்மை, திறமை, தகுதிறம் ஆகியவை குறித்து அளிக்கவேண்டுமென வேண்டுறுத்தப்படும் உறுதிச்சான்றுகள், நற்சான்றிதழ்கள் அல்லது மெய்ப்பிப்புநூள்;

[1][(இ) ஒரு சான்றுறுதி அதிகாரியாக அமர்த்தப்படுவதற்காகவும், தொழிலாற்றுவதற்கான, தொழிலாற்றும் பரப்பிடத்திற்கான அல்லது தொழிலாற்றும் பரப்பிடத்தை விரிவுபடுத்துவதற்கான உறுதிச்சான்று வழங்குவதற்காகவும், அதனைப் புதுப்பிப்பதற்காகவும் செலுத்தத்தக்க கட்டணங்கள் மற்றும் சில குறித்துரைக்கப்பட்ட நேர்வுகளின் வகைகளில் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக அல்லது பகுதியாக விலக்களித்தல்;]

(ஈ) சான்றுறுதிச் செயல் எதனையும் செய்வதற்காக ஒரு சான்றுறுதி அதிகாரிக்குச் செலுத்தப்படத்தக்க கட்டணங்கள்;

(உ) பதிவேடுகளின் படிவம் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய விவரங்கள்;

(ஊ) ஒரு சான்றுறுதி அதிகாரியினுடைய இலச்சினையின் படிவம் மற்றும் வடிவமைப்பு;

(எ) சான்றுறுதி அதிகாரிகளின் தொழில்முறையான அல்லது வேறு நடத்தைகேடு பற்றி சொல்லப்பட்டவை குறித்து விசாரணைகள் நடத்தப்படும் முறை;

[1] சான்றுறுதி அதிகாரிகள் (திருத்தச்) சட்டம், 1999 (சட்ட எண் 36/1999)இன் பிரிவு 2 இனால் மாற்றாக அமைக்கப்பட்டது.

(ஏ) பிரிவு 8இல் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்களுடன்கூட ஒரு சான்றுறுதி அதிகாரி செய்யக்கூடிய செயல்கள்; மற்றும், ஒரு சான்றுறுதி அதிகாரி தமது செயற்பணிகளை ஆற்றும் முறை;

(ஐ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி மைய அரசாங்கத்தினால் வகுக்கப்படும் ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு கால அளவுக்கு அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும். எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

[XXVI/1881 சட்டத்திற்கு திருத்தம்.] 16. [நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1957 இன் (XXXVI/1957) பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் I இன் மூலம் நீக்கறவு செய்யப்பட்டது.] நீக்கறவு செய்யப்பட்டது.